ISSN : 2456-821X அவையம் 2(2) 2018 P.NO. : 1-10




# வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே

**பேரா. சு.பிரேம்குமார்**

*உதவிப் பேராசிரியர்*
*முதுகலைத் தமிழாய்வுத் துறை*
*அரசு கலைக் கல்லூரி*
*திருவண்ணாமலை.*

**கட்டுரை பெறப்பட்டது : 10.10.2018** **ஏற்கப்பட்டது : 10.11.2018**

*சைவ சமயத்திற்கு அடிப்படையாக விளங்குபவை சைவ சித்தாந்தச் சாத்திரங்களாகும். அச்சாத்திரங்களுக்கு அடிப்படையாக விளங்குவன திருமுறைகள். இவற்றுள் காலத்தால் பிற்பட்ட பெரியபுராணம் இயற்றப்பட்ட காலத்திற்கு முன், பின் வாழ்க்கையும் வரலாற்றையும் தத்துவங்களையும் உள்ளடக்கிய காலப் பேழையாக விளங்குகிறது. காலத்தால் முந்தைய கண்ணப்பர், காரைக்கால் அம்மையார் எனச் சேக்கிழாருடைய காலத்திற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட அடியார்களின் வரலாறு தொடங்கிப் பல்லவர்கள், சோழர்கள், பிற்காலப் பாண்டியர்கள் வரை தொடர்புபடுத்தியதோடு திருவுந்தியார் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈறாகிய பதினான்கு நூல்களாகிய சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் தோன்றுவதற்குச் சேக்கிழாரே அடிகோலுகின்றார்.*

*நாயன்மார்கள் அறுபத்து மூவரில் வேளாளர் பதின்மூவர், அந்தணர் பன்னிருவர், முடியரசர் அறுவர், குறுநில மன்னர் ஐவர், வணிகர் ஐவர், ஆதிசைவர் நால்வர், இடையர் இருவர், ஏகாலியர், சாலியர், சான்றார், செக்கார், நுளையர், பாணர், புலையர், வேடர்,*

*மாமாந்திரப் பிராமணர் எனக் குலத்திற்கொருவராகப் பதின்மர் என ஐம்பத்தேழு சிவனடியார்களைக் குலங்குறிக்கும் சேக்கிழார் அறுவருக்கு மட்டும் குலமரபு குறிக்கவில்லை. இவர்களுள் குலம் பற்றிய ஏற்றத்தாழ்வுகளை எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. சிவனடியார் அல்லது சிவனடியார்க்கு அடியார் என்ற அளவில் குறிக்கோள் வாழ்க்கை வாழ்ந்த பெருமக்களைப் போற்றி வரலாறாக்கினர்.*

***ஐயர்***

*ஐயர் என்ற சொல்லுக்குத் தலைவர், சான்றோர், முனிவர், உயர்ந்தோர், தமையன்மார், அந்தணர், கணவன்மார், தேவர், பார்ப்பார், வீரசைவர் பட்டப்பெயர், பாதிரிமார் பட்டப்பெயர் என கலைக்களஞ்சியங்கள் அகராதிகள் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியர் காலத்தில் ஒழுக்கத்தில் மேம்பாட்ட அறிவில் சிறந்த சான்றோர்களைக் குறிக்க ஐயர் என்ற சொல் பயன்பட்டது என்பதை,*

***''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்***

***ஐயர் யாத்தனர் கரணம் என்ப''*** *(தொல். பொருள் நூற்.143)*

*என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாகிறது.*

*சங்ககாலத்தில் இச்சொல் தமையன்மார், முனிவர், அந்தணர், கணவன்மார் என்போரையும் குறிக்கும் சொல்லாக வழக்கிலிருந்தது. அகநானூறு 240, 259, 302; நற்றிணை 122, குறுந்தொகை 123, கலித்தொகை 39 ஆகிய பாடல்களில் தலைவியின் தமயனைச் சுட்டும் இடங்களில் ஐயர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்து 70, திருமுருகாற்றுப்படை 107, குறிஞ்சிப்பாட்டு 15, கலித்தொகை 130 ஆகியப் பாடல்களில் முனிவரைக் குறிக்க ஐயர் என்ற சொல் ஆளப்பட்டுள்ளன. வையை நீர் தேன் கலக்கப்பெற்று வழுவழுப்புடைத்தாயிற்று என்று கருதி ஐயராகிய அந்தணர் அந்நீரினாலே வாய்க் கழுவவில்லை எனப் பரிபாடலில் திருமாலைப் போற்றும் இரண்டாம் பாடலில் ஐயர் என்ற சொல் அந்தணர் என்று பயின்று வருகின்றது. குறமகளிர் தத்தம் கேள்வரைத் தெய்வமென்று தொழுது எழுதலாலே ஐயராகிய கணவன்மாரும் தாம் தொடுத்த அம்பு இலக்குத் தப்பாராயினர் என கலித்தொகை 39-ஆம் பாடலில் ஐயர் என்ற சொல் கணவர்மார் என்ற பொருளில் வந்துள்ளது.*

*பெரியபுராணத்தில் சிவபெருமானைக் குறிக்க ஐயர் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் சேக்கிழார். திருமலைச் சிறப்பு (22), திருநீலகண்ட நாயனார் புராணம் (363), இயற்பகை நாயனார் புராணம் (406) இளையான்குடி மாற நாயனார் புராணம் (442) மானக்கஞ்சாற நாயனார் புராணம் (903) அரிவாட்டாய நாயனார் புராணம் (924) ஆனாய நாயனார் புராணம் (970) திருநாவுக்கரசு நாயனார் புராணம் (1368) திருஞானசம்பந்தர் புராணம் (1946) ஆகியவற்றில் ஒவ்வொரிடத்தும், தடுத்தாட்கொண்ட புராணம் (193, 251), அமர்நீதி நாயனார் புராணம் (571, 548) கண்ணப்ப நாயனார் புராணம் (776, 833) ஆகியவற்றில் இரண்டிரண்டிடங்களிலுமாக மொத்தம் பதினைந்து இடங்களில் ஐயர் என்ற சொல் சிவபெருமானைக் குறிக்க சேக்கிழார் பயன்படுத்துகின்றார்.*

*சிவபெருமானைக் குறிக்க ஐயர் என்ற சொல்லைப் பயன்படுத்திய சேக்கிழார், புலையர் குலத்தைச் சேர்ந்த திருநாளைப்போவாராகிய நந்தனார், வேடுவர் குலத்தைச் சார்ந்த கண்ணப்பர், பாணர் குலத்தைச் சேர்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகிய மூவரை மட்டுமே ஐயர் என சிறப்பிக்கின்றார். ஆனால் இன்றைய பார்வையில் கருத்தியல் வழியாகவும், உணர்வியல் வழியாகவும் இம்மூவரைத் தலித்துகள் என அழைக்கும் வழக்கம் நிலவுகிறது. கண்ணப்பரை பழங்குடி (ST) என்றும், நந்தனார், திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தாழ்த்தப்பட்டவர்களாக (SC) சித்தரிக்கும் போக்கு பரவலாக கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை வாயிலாகத் தமிழ் கூறும் நல்லுலகில் ஆளப்பட்டுள்ளது.*

*தமிழில் கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழமையானதாகவும், முதலாவதாகவும் போற்றப்பெறும் தொல்காப்பிய பொருளதிகார அகத்திணை இயலில்,*

***"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்***

***ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"*** *(தொல். பொருள். 23)*

*என ஆண்பாலுக்கு உரிய உயர்திணைப் பெயராக ஆநிரை மேய்க்கும் ஆயர்களையும், வேட்டைத் தொழிலைச் செய்யும் வேட்டுவரையும் குறிப்பிடுவதிலிருந்து இவ்விரு குடியினரும் தொல்குடி மரபைச் சார்ந்தவர்கள் என்று புலனாகிறது.*

***நந்தனார்***

*நந்தர் என்ற சொல்லுக்கு இடையர் எனக் கழக அகராதி பொருள் உரைக்கின்றது.*

***புலையர்***

*புலைஞர் என்ற சொல்லிற்கு ஈனர், சண்டாளர், பறையர், மறவர், வேடர் எனவும், புலைமகன் என்பதற்கு கீழ்சாதியினர், புரோகிதன், நாவிதன் எனவும் கழக அகராதி பொருள் கொள்கிறது.*

***பாணர்***

*பாணர் என்ற சொல்லிற்கு இசை பாடுவோர், தையல்காரர் எனக் கழக அகராதி பொருள் உரைக்கின்றது.*

*சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு 335-ஆவது பாடலானது,*

***"துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று***

**இந்நான்கு அல்லது குடியும் இல்லை"**

*என மாங்குடிக் கிழார் நான்கு வகையான தொன்மைக் குடிகளைப் பதிவு செய்கின்றார்.*

*கடம்பன் என்ற சொல்லிற்கு கழகத் தமிழ் அகராதி ஒரு குடி, கந்தன், முருகன், முரடன் எனப் பொருள் கொள்கிறது. துடியன் என்பதற்கு சினமுள்ளவன் எனப் பொருள் உரைக்கின்றது. பறையன் என்ற சொல்லே கழகத் தமிழ் அகராதியில் இடம் பெறவில்லை.*

*பறையர்களில் ஒரு பிரிவினராக மேம்பட்டவர்கள் வள்ளுவர்கள். இவ்வள்ளுவர்கள் நாள் கோள் பார்த்துச் சொல்லும் அறிவர்களாக விளங்கினர். "வள்ளுவர்கள் கணியமும், குறியும் சொல்லி வந்தார்கள் என்பதற்கு,*

***"வாய்த்த வந்திரை வள்ளு வன்சொனான்"** (சீவக சிந்தாமணி, 419:4)*

*என்பதைப் போன்ற சான்றுகளைக் காட்டவியலும். இவ்வள்ளுவரில் ஒரு பிரிவினர் ஆசீவகராயினர். மறையர் (பறையர்) குடியில் ஒரு பிரிவினரும், அத்தொல்குடிக்குப் பூசாரியருமான வள்ளுவர்கள் சிலர், பறையர்களின் வீடுகளில் உண்ணார். இவர்கள் புலாலும் கள்ளும் மறுத்தவர்களாகும். இத்தகு வள்ளுவர்கள் தொன்றுதொட்டு பூணூல் அணிவது உண்டு. பிள்ளை என்னும் பின்னொட்டைத் தங்கள் பெயருடன் போட்டுக் கொள்வதும் உண்டு. (சாம்பான், மூப்பன், பிள்ளை ஆகிய பட்டங்கள் பொதுவாக ம(ப)றையர் குடியினருக்கு உண்டு". (பாவாணர், ஒப்பியன் மொழி நூல், ப.31) பாவியற்றுவதில் வல்லவராகிய பாணர்களும் (Bards), தமிழகத்தின் தொல்குடியான (Aborisines) மறையர் குடியிலேயே அடங்குவர்.*

*வடுக (ஆரிய)ப் பிராமணர்கள் தெற்கில் வந்தேறியதால், வள்ளுவர்களின் மதிப்பு மெல்ல மெல்லக் குன்றத் தொடங்கியது. இந்நிலையில் ம(ப)றையர் குடியைச் சேர்ந்த வள்ளுவர்களிடம் போய்க் கணியம் பார்க்கலாகாதென ஒரு தடையை விதித்தனர்.*

*"நல்லது எதையும் செய்வதற்கு முன் வள்ளுவனிடம் (புலையனிடம்) கணியம் கேட்டறியும் பழக்கத்தை விட்டொழித்து, அம்தழலாக வேள்வியை வளர்க்கும் பிராமணனிடம் கேட்டறிக" என்னும் பொருளில்,*

***தலைஇய நற்கருமம் செய்யுங்கால் என்றும்***

***புலையர்வாய் நாட்கோட்டுச் செய்யார் தொலைவில்லா***

***அந்தணர்வாய் நாட் கேட்டுச் செய்த அவர் வாய்ச்சொல்***

***என்றும் பிழைப் பதில்"*** *(ஆசாரக்கோவை, பா.எண்.92)*

*என்றவர் பெருவாயின் முள்ளியாரின் பாடலைப் பாவாணர் எடுத்துரைக்கையில் அவ்வுண்மை விளங்கும்.*

*மேற்கண்ட இக்கூற்றுகளைப் நோக்கும்போது ஆயர், வேட்டுவர், பறையர், பாணர் ஆகிய அனைவரும் ஒரு குல வழித் தோன்றலே எனப் புலனாகிறது. இத்தொன்மையானக் குல மரைபைச் சேர்ந்தவர்களை உயர்த்திக் காட்டும் பொருண்மையில் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தில் சிவபெருமானுக்குரிய சிறப்பு அடைமொழியான ஐயர் என்ற சொல்லை இம்மூவருக்கு மட்டுமே கொடுக்கின்றார்.*

*"**வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே**" (தொல்.பொருள்.638)*

*என்ற தொல்காப்பியரின் கூற்றிற்கு இயைந்தவாறு சேக்கிழாரும் சிவபெருமானை ஐயர் என்று அழைத்தப் பாங்கில் சிவனடியார்களாகிய கண்ணப்பர், திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணராகிய மூவரை மட்டும் அக்காலத்தில் ஐயர் என்று அழைக்கும் வழக்கு மரபாக இருந்ததைப் பதிவாக்கியுள்ளார்.*

*கண்ணப்ப நாயனார் புராணத்தில், வலைத் தொழிலும், சிலைத் தொழிலும் புறத்தே நடைபெற, அகத்தே பற்றியுள்ள அப்பாசவலையை அறுக்கப் போகும் திண்ணனாரைக் குறிக்கும் போது,*

***“போர்வலைச் சிலைத் தொழில் புறத்திலே விளைப்பஅச்***

***சார்வலைத் தொடங்குஅறுக்க ஏகும் ஐயர் தம்முளே***

***கார்வலைப் படுத்தகுன்று கானமா வளைக்கநீள்***

***வார் வலைத் திறம் சுமந்து வந்த வெற்பர் முந்தினார்”*** *(பெ.புராணம்-719)*

*எனப் பதிகின்றார்.*

*திருக்காளத்தி மலை மேல் நாணனோடு குடுமித் தேவரைக் காண ஆர்வமுடன் செல்லும் திண்ணனாரை,*

***“நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத்தாமும்***

***பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி***

***ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்***

***நீள்நிலை மலையைஏறி நேர்படச் செல்லும் போதில்”*** *(பெ.புராணம், 752)*

*என எடுத்துரைக்கின்றார். இவ்விரு இடங்களிலும் திண்ணனாரை ஐயர் என்றே சேக்கிழார் அழைக்கின்றார்.*

*முதல் பாடலில் அகப்பற்றை அறுக்கும் ஞானம் உடையவராகக் காட்சிப்படுத்தி பின்பு தொண்ணூற்றாறு தத்துவங்களையும் கடந்து சத்தியே வடிவாகிய சிவத்தை சேர அணைகின்ற முனிவர்களைப் போல காளத்தி நாதரின் நீண்ட நிலையாய மலையில் அப்பெருமானின் திருமுன்பாகச் சென்றார் என்கிறார்.*

*திருநாளைப்போவார் புராணத்தில், தில்லையில் வந்து தங்கிக் கூத்தனைச் சென்று காண ‘‘இன்னல் தரும் இழிபிறவி இது தடை என்றே துயிலும்’’ நந்தனார் கனவில் சிவபெருமான் தோன்றி ‘‘இப்பிறவிபோய் நீங்க எரியினிடை நீ மூழ்கி முப்புரி நூல் மார்பருடன் முன்அணைவாய்’’ என மொழிந்து, அப்பரிசே, எரி அமைக்கத் தில்லைவாழ் அந்தணர்க்கும் தில்லைக்கூத்தன் அறிவுறுத்தினான். தில்லை வாழ் அந்தணர்கள் சிவபெருமானின் ஆணைப்படி நந்தனாரை அணுகி,*

**“ஐயரே அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்**

**வெய்யஅழல் அமைத்து உமக்குத் தரவேண்டி என விளம்ப**

**நையும்மனத் திருத்தொண்டர் நான் உய்ந்தேன் எனத் தொழுதார்**

**தெய்வமறை முனிவர்களும் தீஅமைத்தபடி மொழிந்தார்”** *(பெ.புராணம், 1075)*

*என மொழிந்ததாகக் கூறும் சேக்கிழார் தில்லைவாழ் அந்தணர்களே நந்தனாரை “ஐயரே” என விளிக்கும்படி அழைத்துள்ள பண்பு வழக்கிலுள்ளதைக் காணமுடிகிறது.*

*திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணத்தில் நான்கு இடங்களில் அந்தணராகிய திருஞான சம்பந்தரே திருநீலகண்ட யாழ்ப்பாணரை ஐயர் என அழைக்குமாறு அமைத்துள்ளார். திருஞானசம்பந்தரின் பெருமையைக் கேட்டு அவரைக் காண மனைவி மதங்கசூளாமணியாருடன் யாழ்ப்பாணர் சீர்காழி வருகின்றார். அவர்கள் வருதலைக் கேள்வியுற்று ஞானசம்பந்தர் அவர்களை எதிர்கொண்டு,*

**“அளவுஇலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி ஐயர்நீர்**

**உளம்மகிழ இங்குஅணைந்த உறுதி உடையோம்”** *(பெ.புராணம், 2036)*

*என மொழிந்ததாக சேக்கிழார் குறிப்பிடுகிறார். யாழ்ப்பாணரின் வேண்டுகோளுக்கிணங்க திருஞானசம்பந்தர் தந்தையாரோடும், அடியவரோடும் யாழ்ப்பாணர் பிறந்த பதியாகிய திருவெருக்கத்தம் புலியூர் அடைந்த பொழுது அவரை நோக்கி,*

**“ஐயர்நீர் அவதரித்திட இப்பதிஅளவுஇல் மாதவம்முன்பு செய்தவாறு”** *(பெ.புராணம், 2082)*

*எனச் சிறப்பு படுத்திக் கூறுகின்றார்.*

*தருமபுரம், திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அன்னையார் பிறந்த ஊர். அவ்வூரை ஞானசம்பந்தர் அடைந்த பொழுது பாணருடைய சுற்றத்தார்கள் சம்பந்தரின் திருப்பதிகங்களின் பண்ணை யாழிலிட்டு மீட்டும் பெற்றப் பேற்றினை பாணர் பெற்றமையை அறிந்தார்கள். “நீங்கள் இப்பேற்றைப் உடைமையால் உலகமெல்லாம் இசை ஓங்குக” எனச் சுற்றத்தவர் கூறிய சொற்கள் பாணரை நடுக்குறச் செய்தது. உடனே பாணர் சுற்றத்தவர் நல்லறிவு பெற வேண்டியும், உலகம் உண்மையுணர வேண்டியும் யாழிலிட்டு இசைக்க இயலா திருப்பதிகம்*

*பாடுமாறு சம்பந்தரை வேண்டினார். அவ்வாறு ஞானசம்பந்தரும் ‘‘மாதர் மடப்பிடி’’ எனும் யாழ்முரி பதிகத்தை அருளிச் செய்தார். அப்பதிகத்தின் பண் யாழ்ப்பாணரின் யாழிலே அடங்கவில்லை. யாழ்ப்பாணர் ஞானசம்பந்தரைப் பணிந்தெழுந்து ‘‘இப்பெரியோர் அருளிச் செய்த திருப்பதிகத்து இசை யாழில் ஏற்பன் என்னைச் செப்பியது இக்கருவியை நான் தொடுதலின் அன்றோ’’ என்று அதை உடைக்க ஓங்கினார். உடனே சம்பந்தர் அவரைத் தடுத்து யாழை வாங்கிக்கொண்டு, ‘‘நீர் எதற்காக இதை உடைக்க முயன்றாய்? உமையோடு சிவபெருமான் அளித்த திருவருளின் பெருமை இவ்யாழில் அடங்குமா? சிந்தையிலும் அளவுபடாத ஒன்று செய்கையில் அளவிடுதல் உண்டோ? இந்த யாழைக் கொண்டே இயன்ற அளவு வாசியும்’’ என்று யாழைக் கொடுத்தார் என்ற செய்தியை,*

***‘‘வீக்குநரம் புடையாழினால் விளைந்ததுஇது என்றுஅங்கு அதனைப்போக்க***

***ஒக்குதலும் தடுத்தருளி ஐயரே உற்றஇசை அளவினால்நீர்***

***ஆக்கிய இக்கருவியினைத்தாரும் என வாங்கிக்கொண்டு அவனி செய்த***

***பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலறாவாயர் பணித்து அருளுகின்றார்”*** *(பெ.புராணம், 2348)*

*என்ற பாடலின் வாயிலாகவும்,*

***‘‘ஐயர்நீர் யாழ்இதனை முரிக்கும் அதுஎன் ஆளுடையான் உடனே கூடச்***

***செய்யசடை யார்அளித்த திருவருளின் பெருமைஎல்லாம் தெரிய நம்பால்***

***எய்தியவிக் கருவியினில் அளவுபடுமோ நம்தம் இயல்புக்கு ஏற்ப***

***வையகத்தோர் அறிவுறஇக் கருவி அளவையின் இயற்றல் வழக்கே என்றார்”***

*(பெ.புராணம், 2349)*

*என்றவாறு சேக்கிழார் பதிகின்றார். இப்பாடலில் தத்தம் இயல்புக்கு ஏற்ற பூமியிலுள்ளோர் அறிவுற இக்கருவியின் இயற்றல் அளவினை அறிந்து இசைப்பதே வழக்கு என்று கூறுகின்றார்.*

*சேக்கிழாருக்கு முன்பிருந்த காலத்தில் ஐயர் என்ற ஒரு சொல் தலைவர், சான்றோர், முனிவர், உயர்ந்தோர், தமையன்மார், அந்தணர், கணவன்மார், தேவர், பார்ப்பார், வீரசைவர்*

எனப் பலரையும் குறிக்க பயன்படுத்தியதை அறியமுடிகின்றது. இவ்வகையில் தாம் இயற்றிய பெரியபுராணத்தில் ஐயர் என்ற சொல்லை சிவபெருமானுக்கு உயர்த்திக் கூறிய வேளையில் சிவனடியார்களுக்கும் அச்சொல்லைப் பொருத்தியுள்ளார்.

எவ்வகையில் பொருத்தியுள்ளார் எனில் வேட்டுவ குலமும், புலையர் குலமும், பாணர் குலமும் எக்காலத்தும் இழிவாகக் கருத முடியாத மேம்பட்ட வாழ்வையுடையவர்கள் என்பதை எடுத்துரைக்கும் வண்ணம் சைவசித்தாந்தத்தின் அடிநாதமாக விளங்கும் தொண்ணூற்றாறு தத்துவங்களைக் கடந்த சான்றோராக கண்ணப்பரை முன்னிறுத்துகின்றார்.

இன்னல் தரும் இழிபிறவி எனக் கருதிய திருநாளைப்போவார்க்கு எரியினிடை மூழ்கி எழச் செய்கின்றார். பஞ்சபூதங்களில் நெருப்பானது அருவுரு ஆகும். நம் மனதில் எண்ணக்கூடிய நினைவுகளும் அருவுருவானது. அருவுருவாகிய தழல் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் தன்னகத்தே கொண்டது என்பதை சேக்கிழார் பெரிய புராண முதல் பாடலான கடவுள் வாழ்த்தில் இறைவனை “அலகில் சோதியன் அம்பலத்தாடுவான் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்” என்கிறார். ஆகவே ஐந்தொழிலும் சிவபெருமானின் தத்துவங்களான செயலை உள்ளடக்கியன. அச்செயலோடு ஒன்று கலந்து எழுந்து வரச் செய்து அருளினார் எனக் கொள்ளலாம்.

மனம், மெய், மொழி ஆகிய முக்கரணங்களால் இறைவனை வழிபட வேண்டும் என்கிறது சைவ சமயம். இச்சமயத் தத்துவத்தை வெளிப்படுத்தவே யாழ்முரிப் பண் இசைக்கப்படுகிறது. யாழிலேப் பண் பொருந்தாததற்கு காரணம் சிந்தையாகிய மனதில் அளவுபடாத ஒன்றை மெய்யால் மொழிய முடியாது என்பதை ஞானசம்பந்தர் உணர்த்துகின்றார். இதுவே உலக வழக்கம் என்கிறார்.

**முடிவுரை**

தொல்காப்பியம் காலந்தொட்டு வழக்கிலிருக்கின்ற “ஐயர்” என்ற சொல் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்து பெற்ற மாற்றத்தினால் இன்றைக்கு ஒரே இனத்தாரைக் குறிக்கும் சொல்லாகிப் போய்விட்டது. ஆனால் இக்கட்டமைப்பு சேக்கிழார் காலத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதை நம்மால் அறியலாகிறது. தொல்காப்பியத்திற்கு உரை கண்ட உரையாசிரியர்கள் “ஐயர்” என்ற சொல்லிற்கு சான்றோர் எனப் பொருள் கண்டனர். இச்சொல்லே சங்க இலக்கியங்களில் முனிவர், அந்தணர்களைக் குறிக்கும் சொல்லாகவும்

மாறிப்போயுள்ளன. இதனைத் தொடர்ந்து சேக்கிழார் ஐயர் என்ற சொல்லை சிவபெருமானைக் குறிக்கவும், சிவனடியார்களைக் குறிக்கவும் பயன்படுத்தியுள்ளதை காண முடிகிறது.

தொல்காப்பியம் குறிப்பிடும் ஆயர், வேட்டுவர் என்ற தொல்குடியைக் குறிக்கும் சொல்லானது பெரியபுராண காலத்தில் முறையே ஆயர் என்பதற்கு இடையர் எனவும், வேட்டுவர் என்பதற்கு வேடர் குலமும் என்பதாகிவிட்டது. அதேபோல "மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்" என தொல்காப்பியம் குறிப்பிடும் மறையவர்களாகிய பறையர் அல்லது புலையர், பாணர் போன்றோர் ஒரே குடி வழியிலிருந்து வந்தவர்கள் என பாவாணர் போன்றோர் பொருளுரைக்கின்றனர். நந்தனார் என்ற சொல்லிற்கு இடையர் என்ற பொருளும்; புலையர் என்ற சொல்லுக்கு பறையர், மறவர், வேடர் எனவும், புலைமகன் என்பதற்கு புரோகிதன், நாவிதன் என்ற பொருளும் வழக்கில் உள்ளதை நாம் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தில் அந்தணர், வேதியர், மறையோர் ஆகிய மூவரையும் ஒரே குலத்தவராக சித்தரிக்கின்றார். இவ்வந்தணர்களை உரையாசிரியர்கள் ஆதிசைவர்கள் என்றழைக்கின்றனர். ஆதிசைவர்களை சிவாச்சாரியார் என அழைக்கும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. இச்சிவாச்சாரியார்களை அந்தணர்கள் என அழைக்கும் மரபோடு "ஐயர்" என அழைக்கும் வழக்கும் இன்றுவரை நிலவுகிறது. அதைப்போலவே பறையர்களில் உட்பிரிவாக உள்ள வேள்விச் சடங்குகளை நிகழ்த்தும் வள்ளுவர்களை "ஐயர்" என அழைக்கும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் "வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே" என்ற கூற்றினை உறுதிப்படுத்தும் வகையில் சேக்கிழார் தாம் இயற்றிய பெரியபுராணத்தில் கண்ணப்பரையும், நந்தனாரையும், திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் உயர்ந்தவர்களாகவே வழக்கில் இருக்கின்றனர் என்பதை மெய்ப்பிக்க சிவபெருமானுக்கு இணையாக சிவனடியார்களாகிய இம்மூவரையும் குறிக்க "ஐயர்" என்ற சொல்லைப் பயன்படுத்தி தொல்குடிமரபின் குலத்தை உயர்த்தியுள்ளதை உணரலாகிறது.